# ***ஜனவரி 2016 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்***

*ஜனவரி **2016** மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள் குறித்து பயிர்ப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அறிக்கை.*

**நெல்**

*திருநெல்வேலி, சேலம், கன்னியாகுமரி, தேனி, திருவாரூர், விழுப்புரம், தருமபுரி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நெல்லில் பரவலாக இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதல் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விவசாயிகள் வேப்பங்கொட்டை சாறு **5%** தயாரித்து ஒட்டும் திரவம் லிட்டருக்கு ஒரு மில்லி வீதம் கலந்து தெளிக்கவும். அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறிய விளக்குப் பொறிகள் ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் அமைக்கவும். அதிக சேதம் இருக்கும் பட்சத்தில் பாஸ்போமிடான் **40** எஸ் எல் **225** மி.லி அல்லது புரோபனோபாஸ் **50** ஈ.சி ஏக்கருக்கு **400** மி.லி. தெளிக்கவும்.*

*நெல் குலை நோய் தாக்குதல் பரவலாக கடலோரப் பகுதியில் உள்ள மாவட்டங்களில் தென்படுகிறது. நோய்த்தாக்குதல் கண்டவுடன் **0.1** சத டிரைசைக்ளசோல் **75** WP **(200** கிராம் / ஏக்கர்**)** என்ற மருந்தை ஒரு வாரம் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும். மேலும் **0.5% (1** கிலோ / ஏக்கர்**)** சூடோமோனாஸ் புளூரசன்ஸ் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தெளித்து மகசூலை பெருக்கவும்.*

*மற்றும் பாக்டீரியா இலை நோயை கட்டுப்படுத்த காப்பர் ஹைட்ராக்சைடு என்ற பூஞ்சாண கொல்லி மருந்தை **2.5** கிராம் / **1** லிட்டர் தண்ணீரில் **(500** கிராம் / ஏக்கர்**)** கலந்து தெளிக்கவும். தழைச்சத்தை மூன்று முறை பிரித்து இடவும்.*

*இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த மான்கோசாப் **400-500** கிராம் **/** ஏக்கர் **2** முறை நட்ட **40** மற்றும் **55** நாட்களுக்குப் பின்னர் பயிர்களில் தெளிக்கவும்.*

**கரும்பு**

*கோயமுத்தூர், ஈரோடு, தர்மபுரி, நாகப்பட்டினம், சிவகங்கை, விழுப்புரம், சேலம் மற்றும் திருச்சி பகுதிகளில் இடைக்கணுப்புழு தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிராமா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியை நான்கு மாத பயிரில் தொடங்கி **15** நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு **1** சி.சி. என்றளவில் **6** முறை வெளியிடவும்.*

**பருத்தி**

சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் தருமபுரி, விழுப்புரம், தேனி மற்றும் சேலம் மாவட்டங்களிலும் தென்படுகின்றன. ஆதலால் இவற்றைக் கண்காணிக்க விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி 5 எண்ணிக்கை ஒரு ஏக்கருக்கு வைக்கவும் மற்றும் இவற்றைக் கட்டுப்படுத்த மீன் எண்ணெய் சோப் 1 கிலோ, 40 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.

திருநெல்வேலி மற்றும் தருமபுரி மாவட்டத்தில் பருத்தியில் சிவப்பு காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் இனக்கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு 5 வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும் மற்றும் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.

### நிலக்கடலை

ஈரோடு, சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இலைச்சுருட்டுப்புழு தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். மழை குறைவாக உள்ள பகுதிகளில் அதிக தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5% தயாரித்து அதனுடன் ஒட்டும் திரவம் 1 மில்லி , லிட்டருக்கு கலந்து தெளிக்கவும். மேலும் வேரழுகல் நோய்த்தாக்குதல் உள்ள பகுதிகளில் கார்பன்டாசிம் (0.1%) மருந்தை (1 கிராம் / 1 லிட்டர் தண்ணீர்) வேர்கள் நனையுமாறு ஊற்றவும்.

### மக்காச்சோளம்

கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, புதுக்கோட்டை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தண்டு துளைப்பான் தாக்குதல் தென்படுகிறது. இவற்றின் அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டை சாறு 5% மற்றும் ஒட்டுந்திரவம் 1 மி.லி ஒரு லிட்டர் கலவைக்கு என்ற அளவில் சேர்ந்து பயன்படுத்தவும்.

### பாசிப்பயறு மற்றும் உளுந்து

#### வெள்ளை ஈ

பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிரில் தென்படும் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் டைமித்தோவேட் 200 மில்லி / ஏக்கர் அல்லது மிதைல் டிமட்டான் 200 மில்லி / ஏக்கர் என்ற அளவில் தெளிக்கலாம்.

### காய்கறிப் பயிர்கள்

#### தக்காளி

காய்துளைப்பானை கட்டுப்படுத்த தக்காளி பயிர்களுக்கு நடுவே ஊடு பயிராக சாம்மந்தி செடிகளை 1:16 வரிசையில் நடவும். இனக்கவர்ச்சி பொறிகள் (12/ எக்டர்) அமைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். முட்டை ஒட்டுண்ணி

*ட்ரைக்கோகிராமா* வினை (50,000 / எக்டர்) பூக்கும் பருவத்தில் விடவும். தேவைப்படின் *பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ்* 2 கிராம் / ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது வேம்பு பூச்சி மருந்து 1.0% இ. சி (10000 பிபிஎம்) 2 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது இன்டாக்சாகார்பு 14.5% எஸ். சி 8 மில்லி 10 லிட்டர் தண்ணீருக்கு அல்லது புளுபென்டமைடு 20 டபில்யு. ஜி 5 கிராம் / 10 லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

இலை சுரங்கப் பூச்சி தாக்குதலை கண்காணிக்க மஞ்சள் ஒட்டும் பொறி (12/ எக்டர்) அமைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் கார்போபியூரன் 3 ஜி 33 கிலோவை ஒரு எக்டருக்கு நடவு செய்யும் போது இடவும் (அல்லது) பூய்ப்ரோபேசின் 25 எஸ்.சி 1 மில்லி / லிட்டர் (அல்லது) துத்தி டைமித்தோபியட் 1 மில்லி / லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். களைச் செடிகளை பிடுங்கி அழிக்கவும்.

**வெண்டை**

மஞ்சள் தேமல் நோய்யை கட்டுப்படுத்த வெள்ளை ஈ யின் நடமாட்டத்தை மஞ்சள் ஒட்டும் பொறி (12/ எக்டர்) அமைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் மித்தைல் டெமட்டான் அல்லது டைமித்தோயேட் 2 மில்லி அல்லது இமிடாகுளோரோபைரிட் 17.8 எஸ்.எல் 2 மில்லி / 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**மிளகாய்**

மிளகாயில் காய் புழுக்களை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகள் (12/ எக்டர்) அமைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். தாக்கப்பட்ட காய்கள் மற்றும் வளர்ந்த புழுக்களை கைகளினால் எடுத்து அப்புறப்படுத்தவும். தேவைப்படின் *பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ்* 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

**தகவல்**

இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-03.